**சுகாதார முறைமை பதிலளிப்பு - ஏஜஐபீ செயற்திட்டம் - 2022 யூலை 18 முதல் திசெம்பர் 31 வரையான**

---

சுகாதார முறைமை பதிலளிப்பு செயற்திட்டம் - ஏஜஐபீ இன் 2022 யூலை 18 முதல் திசெம்பர் 31 வரையான முதலாவது கணக்கீட்டு காலப்பகுதிக்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2022 யூலை 18 ஆம் திகதிய எல்0081ஏ ஆம் இலக்க மற்றும் எல்0124ஏ ஆம் இலக்க கடன் உடன்படிக்கைகளில் உள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், நோக்கங்கள், நிதியிடல் மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு மற்றும் பாதுகாப்பு அமைச்சு என்பன நிறைவேற்றல் முகவர்களாக உள்ளதுடன் மறுசீரமைப்பின் பின்னர் சுகாதார அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் சுகாதார முறைமை மேம்படுத்தல் செயற்திட்ட முகாமைத்துவ அலகு அமுல்ப்படுத்தல் முகவராக உள்ளது. உயிர்காக்கும் மருந்துகள், தடுப்பூசிகள், அறுவை சிகிச்சை மற்றும் சிகிச்சை நுகரக்கூடிய பொருட்கள் மருத்துவ உபகரணங்கள் மற்றும் ஆய்வுகூட மறு முகவர்கள் உள்ளிட்ட முக்கியமான மருந்துகள் மற்றும் ஏனைய மருத்துவப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கும் கொள்வனவு செய்வதற்கும் ஆதரவளிப்பதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். பெறுகை நடவடிக்கைகள் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மற்றும் செயற்திட்ட முகாமைத்துவம் ஆகியவற்றிற்கான ஆலோசனை சேவைகள் மற்றும் தொழில்நுட்ப உதவி ஆகியவற்றிற்கு நிதியளிக்கப்படலாம். மறுசீரமைப்பு கடன் உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 35,000 மில்லியனுக்கு சமமான கொழும்பு நகர மறுசீரமைப்பு செயற்திட்டத்தில் இருந்து ஐ.அ.டொலர் 70 மில்லியன் மற்றும் தணிப்பு நடவடிக்கைகள் மூலம் மண்சரிவு பாதிப்பை குறைக்கும் செயற்திட்டத்தில் இருந்து ஐ.அ.டொலர் 30 மில்லியன் என ஐ.அ.டொலர் 100 மில்லியன் ஆக இருந்ததுடன் ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. இந்த செயற்திட்டம் 2022 யூலை 18 இல் அதன் செயற்பாடுகளைத் தொடங்கியிருந்ததுடன் 2025 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செலவினக் கூற்றினையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| இல. | கணக்கீட்டுக் குறைபாடு | தொகை ரூபா மில்லியன் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பேரேடு மற்றும் நிதிக்கூற்றுக்களில் உள்ள மருந்து மற்றும் அறுவை சிகிச்சை நுகரத்தக்க பொருள் கணக்குகளின் மீதிக்கு இடையே வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 105 | நிதிக்கூற்றுக்களில் மருத்துவப் பொருட்கள் - மருந்துகள் மற்றும் மருத்துவப் பொருட்கள் - அறுவை சிகிச்சை நுகரக்கூடிய பொருட்கள் ஆகியவற்றின் கீழ் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் சரியான தொகைகளாகும். | திருத்தப்பட்ட பேரேட்டு பக்கம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. வேறுபாட்டைக் கண்டறிந்து அதற்கேற்ப சீர்செய்ய வேண்டும். |
| (ஆ) | பேரேட்டுக் கணக்கு மற்றும் நிதிக்கூற்றுக்களில் உள்ள செலாவணி ஆதாயக் கணக்கின் மீதிக்கு இடையே வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | 0.4 | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலாவணி ஆதாயத்தின் பெறுமதி சரியாக இருந்ததுடன் பேரேடு சீர் செய்யப்பட்டது. | -மேற்படி- |

**2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

| இல. | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2022 செப்தெம்பர் 13 ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானம் | இந்த அவசரகால நிதியளிப்பை விரைவாக அமுல்ப்படுத்துவதற்கு தேவையான வசதிகளை கட்டுப்படுத்துவதே செயற்திட்டத்தின் நோக்கமாகும், இதனால் குறைந்த கிரயத்தை அரசாங்கமே ஏற்க வேண்டியிருந்தது. செயற்திட்ட முகாமைத்துவ அலகில் ஏற்கனவே உள்ள வளங்களைப் பயன்படுத்தி செயற்திட்டப் பணிகளை மேற்கொள்வதற்கு முடிவு செய்யப்பட்டது. ஆனால் அதற்கு முரணாக ஆகஸ்ட் மாதத்தில் இரண்டு உத்தியோகத்தர்களும், செப்தெம்பர் மாதத்தில் மேலும் மூன்று உத்தியோகத்தர்களும் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு, மீளாய்வாண்டில் அவர்களுக்கு சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,898,988.94 செலுத்தப்பட்டுள்ளது. | சுகாதார முறைமை மேம்பாட்டு செயற்திட்டத்தின் செயற்திட்ட முகாமைத்துவ அலகு ஏற்கனவே ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இரண்டு கடன்கள் மற்றும் இரண்டு மானியங்களை முகாமை செய்து புதிய செயற்திட்டத்தின் கீழ் பெறுகை நடவடிக்கைகள் தொடர்பான பணிகளின் அளவு மற்றும் மருத்துவப் பொருட்களின் அவசரம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு செயற்திட்ட முகாமைத்துவ அலகின் ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரிற்கு மேலதிகமாக இரண்டு சிரேஷ்ட பெறுகை உத்தியோகத்தர்கள், ஒரு சிரேஷ்ட நிதி உத்தியோகத்தர், ஒரு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு உத்தியோகத்தர் மற்றும் ஒரு செயற்திட்ட உத்தியோகத்தர் ஆகியோருக்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடமிருந்து அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | அமைச்சரவைத் தீர்மானத்துடன் இணங்குதல் வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | நிதிப்பிரமாண இல: 272(3) மற்றும் இல: 272(4) | மாத இறுதியில் இருந்து 06 வாரங்களுக்கு விஞ்சாத காலப்பகுதி முடிவடைவதற்கு முன்னர் அனைத்து அசல் கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு ஒவ்வொரு மாதமும் அனுப்பப்பட வேண்டும். எனினும் ரூபா 5,214 மில்லியன் தொகையான மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வது தொடர்பான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களின் நகல் பிரதிகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. | நிதிப்பிரமாணம் 272(3) இன் பிரகாரம் உறுதிச்சீட்டுக்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணங் களுடன் இணங்குதல் வேண்டும். |